சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

## Case No. OS.24/2022

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப் பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனி | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | சின்னப்பா | ஜாதி | |
| கிராமம் | முள்ளண்டிரம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**13.08.2024** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 24.04.2000 தேதி யிட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** பட்டா நெம்பர் 539-க்கான 16.06.2018 தேதியிட்ட சிட்டா **வா.சா.ஆ.2,** பட்டா நெம்பர் 2995-க்கான 30.01.2022 தேதியிட்ட சிட்டா **வா.சா.ஆ.3** தாக்கல் செய்கிறேன்.

மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.